## உலக வில்வித்தை: இந்திய மகளிரணி சாம்பியன்



**பெர்லின், ஆக. 4:** ஜெர்மனியில் நடைபெறும் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் காம்பவுண்ட் மகளிர் அணிகள் பிரிவில் இந்தியா வெள்ளிக்கிழமை தங்கப் பதக்கம் வென்றது. கடந்த 1981 முதல் இந்தப் போட்டியில் பங்கேற்று வரும் இந்தியர்கள், இதில் சாம்பியனாவது இதுவே முதல் முறையாகும்.

காம்பவுண்ட் மகளிர் அணிகள் இறுதிச்சுற்றில் இந்தியாவின் ஜோதி சுரேகா, அதிதி ஸ்வாமி, பர்னீத் கௌர் கூட்டணி 235-229 என்ற புள்ளிகள் கணக்கில் மெக்ஸிகோ அணியை சாய்த்து முதலிடம் பிடித்தனர். இந்த அணி முன்னதாக, காலிறுதியில் சீன தைபேயையும் (228-226), அரையிறுதியில் நடப்பு சாம்பியனான கொலம்பியாவையும் (220-216) தோற்கடித்தது.

இந்தப் போட்டி வரலாற்றில் இதற்கு முன் அதிகபட்சமாக இந்தியர்கள், ரீகர்வ் பிரிவு இறுதிச்சுற்றில் 4 முறையும், காம்பவுண்ட் பிரிவு இறுதிச்சுற்றில் 5 முறையும் வெற்றியை இழந்தது நினைவுகூரத்தக்கது.

### ஃபிடே தரவரிசை

## விஸ்வநாதன் ஆனந்தை பின்னுக்குத் தள்ளினார் குகேஷ்!

**பாகு, ஆக. 4:** அஜர்பைஜானில் நடைபெறும் உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் டி.குகேஷ் 2-ஆவது சுற்றில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர், இந்திய நட்சத்திரமான விஸ்வநாதன் ஆனந்தை பின்னுக்குத் தள்ளி, ஃபிடே தரவரிசையில் அதிக புள்ளிகள் பெற்ற இந்தியராக முன்னிலை பெற்றார்.



முன்னதாக 2-ஆவது சுற்றில் அவர், அஜர்பைஜானின் மிஸ்ராடின் இஸ்கந்தரோவை எதிர்கொண்டார்.

அந்த சுற்றின் 2-ஆவது கேமில் 44-ஆவது நகர்த்தலில் தனது வெற்றியை உறுதி செய்தார் குகேஷ். இந்த வெற்றியை அடுத்து அவரது லைவ் ரேட்டிங் புள்ளிகள் 2755.9-ஆக அதிகரிக்க, விஸ்வநாதன் ஆனந்தின் லைவ் ரேட்டிங் 2754.0-ஆக உள்ளது.

இதையடுத்து உலகத் தரவரிசையில் குகேஷ் 9-ஆவது இடத்துக்கு முன்னேறி, ஆனந்தை 10-ஆவது இடத்துக்கு தள்ளியிருக்கிறார் குகேஷ்.

இதனிடையே இந்தப் போட்டியில், இதர இந்தியர்களான எஸ்.எல் நாராயணன், நிஹல் சரின், பிரக்ஞானந்தா ஆகியோரும் 2-ஆவது சுற்றில் வெற்றியைப் பதிவு செய்ய, விதித் சந்தோஷ் குஜராத்தி, அர்ஜுன் எரிகைசி, கார்த்திக் வெங்கடராமன் ஆகியோர் டிரா செய்தனர். அபிமன்யு பி. அந்த சுற்றில் தோல்வி கண்டனர்.

மகளிர் பிரிவு 2-ஆவது சுற்றில் ஆர்.வைஷாலி, கோனெரு ஹம்பி, டி.ஹரிகா, திவ்யா தேஷ்முக் ஆகியோர் வெற்றியைப் பதிவு செய்ய, மேரி ஆன் கோம்ஸ் டிரா செய்தார். பிரியங்கா நுடாகி தோல்வியடைந்தார்.

# உலக பல்கலை. விளையாட்டுகள்: ஜோதி, அமலனுக்கு வெண்கலம்

**செங்டு, ஆக. 4:** சீனாவில் நடைபெறும் உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில், தடகள பிரிவில் இந்தியாவின் ஜோதி யாராஜி, அமலன் போர்கோஹெய்ன் வெள்ளிக்கிழமை வெண்கலப் பதக்கம் வென்று அசத்தினர்.




மகளிருக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் களம் கண்ட ஜோதி, 12.78 விநாடிகளில் இலக்கை எட்டி 3-ஆம் இடம் பிடித்தார். ஸ்லோவேகியாவின் விக்டோரியா ஃபோர்ஸ்டர் (12.72), சீனாவின் யானி வூ (12.76) ஆகியோர் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

கடந்த ஆண்டு அக்டோபரில் தேசிய தடகளத்தில் ஜோதி 12.82 விநாடிகளில் வந்ததே தேசிய சாதனையாக இருந்த நிலையில், தற்போது தனது அந்த சாதனையை அவரே முறியடித்திருக்கிறார்.

ஆடவருக்கான 200 மீட்டர் ஓட்டத்தில் அமலன் போர்கோஹெய்ன் 20.55 விநாடிகளில் வந்து 3-ஆம் இடம் பிடித்தார். தென் கொரியாவின் செபோ இசாடோர் (20.36), ஜப்பானின் யுடாய் நிஷி (20.46) முறையே முதலிரு இடங்களைப் பிடித்தனர். நடப்பு சீசனில் இது அமலனின் 'பெஸ்ட் டைம்' ஆகும். இந்தப் பிரிவில் தேசிய சாதனை (20.52) அமலன் வசமே இருப்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியின் பதக்கப் பட்டியலில், வெள்ளிக்கிழமை நிலவரப்படி இந்தியா 11 தங்கம், 5 வெள்ளி, 9 வெண்கலம் என 25 பதக்கங்களுடன் 4-ஆவது இடத்தில் இருக்கிறது. சீனா, தென் கொரியா, ஜப்பான் முறையே முதல் 3 இடங்களில் உள்ளன.

EVA STALIN IAS ACADEMY

# மதம் பிடித்த மனிதம்!

மே மாதம் தொடங்கிய மணிப்பூர் இனக் கலவரத்துக்கே இன்னும் முற்றுப்புள்ளி வைக்க முடியாத நிலையில், தலைநகர் தில்லி அருகிலுள்ள ஹரியாணா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மதக் கலவரம், மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது.

ஹரியாணா மாநிலத்தின் நூ மாவட்டம் மத வன்முறைகள், குற்றச் செயல்களால் பல்லாண்டுகளாகவே கண்காணிப்பு வளையத்தில் உள்ளது. இணையவழிக் குற்றங்கள் அதிக அளவில் நடக்கும் பகுதி இது. இம்மாவட்டத்தின் மையப்பகுதியான நூஹில், மகாபாரதத்துடன் தொடர்புடைய நல்ஹார் மகாதேவர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள சிவலிங்கத்துக்கு ஜலாபிஷேகம் செய்ய ஆண்டுதோறும் ஆஷாட (ஆடி) மாதத்தில் ஹிந்து பக்தர்கள் யாத்திரையாக வருவது வழக்கம்.

ஹிந்துக்கள் ஒரு காலத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்த இந்த நகரத்தின் மையப் பகுதியிலுள்ள கோயிலைச் சுற்றிலும் இப்போது அதிக அளவில் வாழ்பவர்கள் இஸ்லாமியர்கள். நூ மாவட்டம் இஸ்லாமியர்கள் பெருமளவில் வாழும் பகுதியாக மாறியிருந்தாலும், அண்மைக்காலம் வரை இக்கோயிலின் வழிபாடுகளில் சிக்கல் நேரிடவில்லை. அவ்வப்போது உரசல்கள் ஏற்பட்டாலும், காவல் துறையின் தலையீட்டில் இரு தரப்பினரும் அமைதியாகிவிடுவது வழக்கம்.

இந்த ஆண்டு வழக்கத்துக்கு விரோதமாக, கோயிலுக்கு வந்த பக்தர்கள் வன்முறைக் கும்பலால் திட்டமிட்ட ரீதியில் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார்கள். இரு இஸ்லாமியர்களைக் கொன்ற வழக்கில் குற்றவாளியான பசுப் பாதுகாப்பு இயக்கத் தலைவர் மோனு மானேசர் ஜலாபிஷேக யாத்திரையில் தான் பங்கேற்க இருப்பதாக சமூக ஊடகத்தில் வெளியிட்ட காணொலிதான் இந்தக் கலவரத்துக்குக் காரணம்.

மோனு மானேசரின் காணொலி காரணமாக, யாத்திரைக்கு ஒரு வாரத்துக்கு முன்பே சமூக ஊடகங்களில் அதற்கு கடுமையான எதிர்ப்பு எழுந்தது. அதனால் அவரை இந்த யாத்திரையில் பங்கேற்க விடாமல் காவல்துறை தடுத்துவிட்டது.

அப்படியிருந்தும், ஜூலை 31-இல் நடைபெற்ற ஜலாபிஷேக யாத்திரை நடுவழியில் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், கல்வீச்சும் நடத்தப்பட்டது. மகாதேவர் கோயிலுக்கு ஊர்வலமாகச் சென்ற 2,500-க்கும் மேற்பட்ட பக்தர்களும், அவர்களுடன் சென்ற விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினரும் தாக்குதலுக்கு உள்ளாகினர். மகாதேவர் கோயிலைச் சூழ்ந்துகொண்ட வன்முறையாளர்களால் பெரும் அசம்பாவிதச் சூழல் உருவானது.

இதனை முன்கூட்டியே கணித்து காவலை அதிகப்படுத்த மாநில அரசு தவறிவிட்டது. பாதுகாப்புக்கு வந்திருந்த குறைந்த எண்ணிக்கையிலான காவல் துறையினரால் எதுவும் செய்ய முடியாத நிலை. குருகிராமிலிருந்து துணை ராணுவம் வந்த பிறகே கோயிலில் இருந்த பக்தர்கள் பாதுகாப்பாக வெளியேற முடிந்தது.

இந்த மோதலில் இரு ஊர்க்காவல் படையினரும் யாத்ரீகர்கள் மூவரும் கொல்லப்பட்டனர். பக்தர்கள் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன; சுமார் 70 பேர் காயமடைந்தனர்; சைபர் காவல் நிலையம் சூறையாடப்பட்டது; காவல் பணியிலிருந்த துணை கண்காணிப்பாளர் துப்பாக்கியால் சுடப்பட்டதால், அபாய நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வன்முறையாளர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், துப்பாக்கிகள், வீடுகளில் குவிக்கப்பட்டிருந்த கற்கள் ஆகியவை, இது திட்டமிட்ட தாக்குதல் என்பதை உறுதிப்படுத்துகின்றன. சிறுபான்மை சமுதாயத்தினரை வழிநடத்த வேண்டிய மக்கள் பிரதிநிதிகளான நூ எம்எல்ஏ அஃப்தாப் அகமதுவும், பெரோஸ்பூர் ஜிர்கா எம்எல்ஏ மம்மன் கானும் பொறுப்புடன் செயல்படவில்லை என்பதை அவர்களது சமூக ஊடகப் பதிவுகள் வெளிப்படுத்துகின்றன.

நூஹில் நிகழ்ந்த இந்த வன்முறைக்கு எதிர்வினையாக, அண்டை நகரங்களான சோனாவிலும் குருகிராமிலும் மதக்கலவரங்கள் நிகழ்ந்துள்ளன. குருகிராமில் ஒரு மசூதி எரிக்கப்பட்டு, அதன் இமாம் கொல்லப்பட்டிருக்கிறார். மேலும் சில வழிபாட்டுத் தலங்களும் தாக்கப்பட்டுள்ளன. இஸ்லாமியர்களின் வணிக நிறுவனங்களும் பல இடங்களில் தாக்கப்பட்டுள்ளன. அதிக அளவில் கணினி தொழில்நுட்பம், மென்பொருள் நிறுவனங்கள் கொண்ட ஹரியாணாவின் தொழில்நகரமான குருகிராம் கலவர பூமியாக மாறியதால், சர்வதேச அளவில் இந்தியாவுக்கு அவப்பெயர் ஏற்பட்டிருக்கிறது.

மனிதர்களுக்கு மதம் பிடித்தால் என்ன நடக்கும் என்பதற்கு இந்தக் கலவரங்கள் உதாரணம். இதில் பெரும்பான்மை – சிறுபான்மை என்ற பேதமில்லை. இந்தக் கலவரம் தொடர்பாக இப்போதைக்கு 93 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இரு தரப்பிலும் 176 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். நூ மாவட்டத்தில் இணைய சேவை முடக்கப்பட்டு 144 தடையுத்தரவு அமலில் இருக்கிறது.

இந்தியாவில் நடந்திருக்கும் பெரும்பான்மையான மதக் கலவரங்கள் சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில்தான் தொடங்குவது வழக்கம். கலவரங்களின் இறுதியில் பெருமளவில் பாதிக்கப்படுவதும் சிறுபான்மையினர்தான். அதேபோல மதக் கலவரங்களைத் தொடர்ந்து இரு மதத்தினரும் எப்போதும் இணக்கமாக வாழ வழியே இல்லாமல் சமூக ஒற்றுமை குலைவதும் வரலாறு உணர்த்தும் உண்மை.

பிரதமர் மோடி வளர்ச்சி அரசியலை நோக்கி தனது அரசை நடத்துவதாகக் கூறும் நிலையில், அவரது கட்சியை ஆதரிப்போரின் அத்துமீறல்கள் அரசுக்கு அவப்பெயரையே உருவாக்கும். அதேபோல, பாஜகவை எதிர்ப்பதற்காக சிறுபான்மையினரின் வன்முறையைக் கண்டிக்காமல் இருப்பது எதிர்க்கட்சிகளின் நம்பகத்தன்மையை பாதிக்கும். இவ்விரண்டுமே நாட்டிற்கு நல்லதல்ல.

சமூக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டிய அரசியல்வாதிகள், மதக் கலவரங்கள் மூலம் அரசியல் ஆதாயம் தேட முற்படுவதுதான் இதுபோன்ற பிரச்னைகளுக்குக் காரணம்!

# பயங்கரவாதத்தை வேரறுப்பது எப்போது?

பாகிஸ்தானில் சமீபத்தில் அரங்கேறி இருக்கும் பயங்கரவாதத் தாக்குதல் எதிர்பாராததல்ல. மேற்காசியாவிலும், வடக்கு ஆப்பிரிக்காவிலும் அன்றாட நிகழ்வாகவே மாறியிருக்கிறது பயங்கரவாதத் தாக்குதல்கள். உலகின் எந்தப் பகுதியும் அதற்கு விதிவிலக்கல்ல.

இளைஞர்களை மூளைச் சலவை செய்து ஆயுதங்களைக் கொடுத்து, பயிற்சியளித்து, ஏவி விட்டு திடீர் தாக்குதலை நிகழ்த்தி - விலைமதிப்பில்லா மனித உயிர்களைக் காவு வாங்கி, ரத்தக் களறியை ஏற்படுத்துவது தான் தீவிரவாதக் கும்பலின், பயங்கரவாத குழுக்களின் அரிய பெரிய சாதனைகளாக இருந்து வருகின்றன.

ஆப்கானிஸ்தான், இராக், நைஜீரியா, சிரியா, பாகிஸ்தான், சோமாலியா, இந்தியா, யேமன், பிலிப்பின்ஸ், காங்கோ ஜனநாயக குடியரசு, எகிப்து, லிபியா, மாலி, மத்திய ஆப்பிரிக்க குடியரசு, கேமரூன், துருக்கி, தெற்கு சூடான், தாய்லாந்து ஆகிய நாடுகள் தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன; பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதில் ஒரு சில நாடுகளில் சராசரியாக 10,000 பேர் ஒவ்வோர் ஆண்டும் கொல்லப்பட்டு வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவி பொது மக்கள் என்பதுதான் கொடுமையிலும் கொடுமை! பாகிஸ்தானில் குறைந்தது 12 தீவிரவாத - பயங்கரவாதக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுக்கு ஆயுதங்கள் கொடுத்து, பயிற்சி அளித்து, குறிப்பாக இந்தியா மீது ஏவிவிட்டு - இந்தியாவைச் சீர்குலைப்பதில் - பாகிஸ்தான் அரசு முனைப்பாக இருக்கிறது. இந்தப் பயங்கரவாதக் குழுக்களில் - லஷ்கர்-ஏ-தொய்பா, ஜெய்ஷ்-ஏ-முகமது ஆகியவை முக்கியமானவை!

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் ஆட்சி நடந்து வருகிறது. அந்த நாட்டில் பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொடுமைகள் கண்ணீர் சிந்த வைக்கின்றன. கல்வி கற்க, அலுவலகங்களில் பணிபுரிய, தனியாக வெளியில் செல்ல - பெண்களுக்கு அனுமதி இல்லை. மீறினால் பெண்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

அப்பாவி பொதுமக்கள் 1,100 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; 3,500 பேர் படுகாயமடைந்து மரணத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். கடந்த 2021-ஆம் ஆண்டு ஆகஸ்டில் ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு நடந்த காட்டுமிராண்டித்தனங்கள் இவை!

ஐ.எஸ்., ஐ.எஸ்.கே. ஆகிய தீவிரவாத அமைப்புகள் - ஆப்கானிஸ்தானில் உள்ள வழிபாட்டுத் தலங்கள், பள்ளிகள், சந்தைப் பகுதிகளில் திரளும் அப்பாவி பொதுமக்கள் மீது வெடிகுண்டுகளை வீசியும், துப்பாக்கிகளால் சுட்டும், உயிர்களற்ற உடல்களை நாய்களுக்கும் கழுகுகளுக்கும் இரையாக்கி மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர்!

வடமேற்கு சிரியாவில் அரசுக்கு எதிரான போராளிக் குழுக்கள் - துருக்கி ஆதரவுப்படைகள் மற்றும் ஹயத் தஹ்ரீர் அல் ஷாம் என்ற போராளிக் குழு ஜூன் 24, 2023-இல் நடத்திய தாக்குதலில் அப்பாவி விவசாயிகள் 19 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 50-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருக்கின்றனர்.


டாக்டர் கே.பி. இராமலிங்கம்

உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பயங்கரவாதம், தீவிரவாதம், அடிப்படைவாதம் ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. அடிப்படைவாதம் என்பது, தமது கருத்தை பிறர் அப்படியே பின்பற்ற வேண்டும் எனும் நோக்கத்தோடு வன்முறை சார்ந்தோ அல்லது அதிகாரத்தின் வழியோ மேற்கொள்வது! தீவிரவாதம் என்பது, அச்சமூட்டும் வன்முறை நடவடிக்கை. பயங்கரவாதம் என்பது, யாருக்காகவோ அப்பாவிகள் பாதிக்கப்படுவர் எனத் தெரிந்தே முறையான அல்லது முறையற்ற அமைப்பாக இணைந்தோ, தனித்தோ செயல்படுவது. இவை அனைத்தும் கொடுஞ்செயல் அல்லவா?

2001-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-இல் அமெரிக்காவின் வணிக இரட்டைக் கோபுரங்கள் தாக்கி தகர்க்கப்பட்டதும், சுமார் 3,000 அப்பாவி பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டதும் பயங்கரவாதிகளின் ஈவு இரக்கமற்ற வெறிச் செயல்கள்! இலங்கை மண்ணில் வழிபாட்டில் கிறிஸ்தவர்கள் கண்களை மூடித் திளைத்திருந்தபோது பயங்கர வெடிகுண்டு தாக்குதலில் தகர்ந்து தரைமட்டமானது தேவாலயம்! 300-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்! உருக்குலைந்தனர்; தீவிரவாதிகளின் கோரத் தாண்டவமல்லவா?

உகாண்டா நாட்டில் ஒரு பள்ளி வளாகத்துக்குள் தீவிரவாதிகள் புகுந்து தாக்கியதில் 50 குழந்தைகள் ரத்தக் குளத்தில் சிட்டுக் குருவிகளைப் போல சிதைந்து மிதந்த காட்சி கண்களை கசிந்துருகச் செய்தது! 2023 ஜூன் 16-இல் கிழக்கு ஆப்பிரிக்க நாடான உகாண்டாவிலுள்ள பள்ளியொன்றில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில்தான் - உலகின் இளந்தளிர்கள் கோடரி கொண்டு சிதைக்கப்பட்டிருக்கின்றனர்!

2023 மார்ச் மாதத்தில் ஏடிஎஃப் எனும் பயங்கரவாத அமைப்பு உகாண்டாவில் மக்கள் கூடிய ஒரு சந்தைப் பகுதியில் நடத்திய தாக்குதலில் 25 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர். பலவீனமான மத்திய அரசைக் கொண்ட அண்டை நாடான காங்கோவின் எல்லையில் உள்ள காட்டுப் பகுதியில் தான் இந்தப் பயங்கரவாத அமைப்பு தனது தளத்தை அமைத்துக் கொண்டுள்ளது.

மத்திய ஆப்பிரிக்க நாடான டி.ஆர்.காங்கோவின் இடூரி மாநிலம் லாலா என்ற இடத்தில் அகதிகள் மையத்தின் மீது சிடிஇசிஓ என்ற ஆயுதக் குழு 2023 ஜூன் 12-இல் நடத்திய தாக்குதலில் 56 பேர் உயிரிழந்திருக்கின்றனர்; இவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள்.

'தீவிரவாத குழு - பயங்கரவாத குழு' ஆகியவை உலக நாடுகளில் மதத்தின் பெயரில்தான் உருவாக்கப்படுகின்றன. தான் சார்ந்துள்ள மதத்தை உலகம் முழுவதும் பரப்பப் போவதாக பாசாங்கு மொழியில் பேசி, இளைஞர்களை மூளைச் சலவை செய்து, உலக அமைதிக்கு சவால் விடுக்கின்றனர். இளந்தளிர்கள், ஏதுமறியாத அப்பாவி பொதுமக்கள் ஆகியோரை கொன்று குவிப்பது தொடர்கதைகளாகி வரும் சூழலில் ராணுவ ரீதியிலான மோதலிலும் சாமானிய மக்களின் உயிர் பறிக்கப்படுகின்ற நிகழ்வுகளும் நடக்கின்றன!

**'தீவிரவாத - பயங்கரவாத குழு' ஆகியவை உலக நாடுகளில் மதத்தின் பெயரில்தான் உருவாக்கப்படுகின்றன. தான் சார்ந்துள்ள மதத்தை உலகம் முழுவதும் பரப்பப் போவதாக பாசாங்கு மொழியில் பேசி, இளைஞர்களை மூளைச் சலவை செய்து, உலக அமைதிக்கு சவால் விடுக்கின்றனர்.**

வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் ராணுவத்துக்கும், ஆர்எஸ்எஃப் துணை ராணுவப் படைக்கும் அதிகாரப் போட்டி காரணமாக 2023 ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் சண்டை நடந்து வருகிறது. இதில் இது வரை 2,100 பேர் பலியாகி இருக்கின்றனர்!

'சூடானில் நடைபெற்றுவரும் மோதலில் சிறுவர்கள்தான் மிக அதிகமாக சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். சண்டையிடும் இரு தரப்புப் படையினருக்கும் இடையே சிக்கி இதுவரை 350-க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பலியாகியுள்ளனர். ஏராளமானோர் காயமடைந்தும் இருப்பிடங்களை விட்டு வெளியேறி தவித்தும் வருகின்றனர்.

தற்போது சூடானில் ஒரு கோடியே நாற்பது லட்சம் சிறுவர்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் தேவைப்படுகின்றன' என்று சூடான் நாட்டுக்கான யுனிசெஃப் அமைப்பின் பிரதிநிதி மன்டீப் ஓபிரையன் ஜூன் 16-ஆம் தேதி கண்ணீர் மல்கக் கூறியிருக்கிறார்.

கிரீஸ் நாட்டுக்கு அருகில் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 350 பாகிஸ்தானியர்கள் கடலில் மூழ்கி உயிர்விட்டிருக்கின்றனர். இவர்கள் ஐரோப்பிய நாடுகளில் புகலிடம்பெற விரும்பி - சட்டவிரோதமாக பயணித்தவர்கள் என்று பாகிஸ்தான் அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. உள்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் குழப்பம், வறுமை, பசி, பஞ்சம், பட்டினி என படுபாதாளத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது பாகிஸ்தான். இதற்கெல்லாம் காரணம் - அந்நாட்டில் நிலவும் தீவிரவாதமும் பயங்கரவாதமும்தான்.

நாடு முழுவதும் திட்டமிட்டு நடத்தப்படும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் சதித்திட்டம் தொடர்பான வழக்கில் - 9 பேரை கைது செய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறது தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.). கைது செய்யப்பட்டுள்ள 9 பேரும் 30 வயதுக்கு கீழே உள்ள இளைஞர்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் 5 பேர் தொழில்நுட்ப பின்புலம் கொண்டவர்கள்; இந்தியாவுக்கான ஐ.எஸ். அமைப்பின் திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் தாக்குதல் நடத்தும் சதித்திறனை மேம்படுத்த, ரோபோட்டிக்ஸ் தொடர்பான படிப்பை மேற்கொள்ளுமாறு அந்த அமைப்பால் பணிக்கப்பட்டவர்கள்.

வெளிநாட்டில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாத செயல்பாட்டாளர்களின் உத்தரவின்படி - ஷாரிக், முனீர், யாசின் ஆகியோர் தங்களது பிராந்தியத்தில் பயங்கரவாதம், வன்முறையை கட்டவிழ்க்க சதித் திட்டம் தீட்டியவர்கள்!

நாட்டின் பாதுகாப்பு, ஒற்றுமை மற்றும் இறையாண்மையைச் சீர்குலைக்கும் நோக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட இதர நபர்களைத் தேர்வு செய்து, அவர்களை பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட மூளைச் சலவை செய்தனர். குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு வெளிநாட்டு செயல்பாட்டாளர்களிடம் இருந்து கிரிப்டோ கரன்சி மூலம் நிதி அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) விசாரணையில் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தியிருக்கிறது!

வங்கதேசத்தில், மியான்மரில், இலங்கையில், நேபாளத்தில், தென் கொரியாவில், ஈரானில், இராக்கில், இஸ்ரேலில், பாலஸ்தீனத்தில், ஆப்பிரிக்க நாடுகளில், ரஷியாவில், உக்ரைனில்... இப்படி ஒட்டுமொத்த உலக நாடுகளின் பெரும் பகுதிகளில் தீவிரவாதம், பயங்கரவாதம் கொடிகட்டிப் பறப்பதை எத்தனை நாளைக்கு நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது?

உலகத் தலைவர்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இது!

கட்டுரையாளர்:
**மாநில துணைத் தலைவர்,**
**பாரதிய ஜனதா கட்சி, தமிழ்நாடு.**

# ஞானவாபி மசூதியில் ஆய்வை மீண்டும் தொடங்கியது தொல்லியல் துறை

**வாரணாசி, ஆக.4:** அலாகாபாத் உயர்நீதிமன்ற அனுமதியைத் தொடர்ந்து, உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் அமைந்துள்ள ஞானவாபி மசூதியில் அறிவியல் பூர்வ ஆய்வுப் பணிகளை தொல்லியல் துறை வெள்ளிக்கிழமை மீண்டும் தொடங்கியது.

'மசூதியில் காலை 7 மணிக்கு ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டது. ஆய்வுப் பணிகள் 5 முதல் 6 நாள்கள் வரை தொடர வாய்ப்புள்ளது' என்றும் தொல்லியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

மசூதியில் ஆய்வுக்கு அனுமதித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க உச்ச நீதிமன்றமும் வெள்ளிக்கிழமை மறுத்தது.

இதற்கிடையே, மசூதியில் தொல்லியல் துறை ஆய்வுப் பணிகளை நிறைவு செய்ய கூடுதலாக 4 வார கால அவகாசம் அளித்து வாரணாசி மாவட்ட நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

ஞானவாபி மசூதியின் வெளிப்புறச் சுவரில் உள்ள ஹிந்து கடவுள் சிலைகளை வழிபட அனுமதிக்கக் கோரி தில்லியைச் சேர்ந்த 5 பெண்கள் வழக்குத் தொடுத்தனர். இதையடுத்து, நீதிமன்ற உத்தரவின்படி மசூதியில் ஆய்வு நடத்திய தொல்லியல் துறையினர் சிவலிங்கம் உள்ளதாக தெரிவித்தனர். ஆனால், அது மசூதியில் உள்ள தீர்த்தேக்க தொட்டியின் நடுவே உள்ள நீரூற்று சிலை என மசூதி நிர்வாகம் தெரிவித்தது.


வாரணாசி ஞானவாபி மசூதியில் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொள்ள வந்த தொல்லியல் துறை அதிகாரிகள்.

பல்வேறு மேல்முறையீடுகளைத் தொடர்ந்து, அந்தப் பகுதியை மூடி சீல் வைத்துப் பாதுகாக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே, மசூதியின் முழு பகுதியிலும் ஆய்வு நடத்த வேண்டும் என்று ஹிந்து அமைப்பினர் மனு தாக்கல் செய்திருந்தனர். இதை ஏற்ற வாரணாசி மாவட்ட நீதிபதி ஏ.கே.விஸ்வேஷ், ஞானவாபி மசூதியில் சீலிடப்பட்ட பகுதியைத் தவிர பிற இடங்களில் தொல்லியல் துறை அறிவியல்பூர்வ ஆய்வை நடத்த கடந்த ஜூலை 21-ஆம் தேதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து மசூதி குழு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மனுவில், 'எதிர் தரப்பினர் மேல்முறையீடு செய்வதற்குக்கூட கால அவகாசம் அளிக்காமல், மசூதியில் ஆய்வு நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆய்வுக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது.

இதைப் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், மசூதியில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ஜூலை 26-ஆம் தேதி மாலை 5 மணி வரை இடைக்கால தடை விதித்தது. மேலும், இந்தக் கால இடைவெளியில் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தை மனுதாரர் அணுகலாம்' என்று உத்தரவிட்டது.

அதனடிப்படையில், மசூதி குழு தரப்பில் அலாகாபாத் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது-இந்த மனுவை வியாழக்கிழமை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், 'மசூதியில் ஆய்வு மேற்கொள்வது தொடர்பாக மாவட்ட நீதிமன்றம் முறையான உத்தரவையே பிறப்பித்துள்ளது. அதில் தலையிட எந்தவித அவசியமும் இல்லை. இந்த ஆய்வின்போது தோண்டும் பணிகள் எதையும் மசூதியில் மேற்கொள்ளக் கூடாது' என்று உத்தரவிட்டது.

**ஆய்வுப் பணி மீண்டும் தொடக்கம்:** உயர் நீதிமன்ற அனுமதியைத் தொடர்ந்து, தொல்லியல் துறை நிபுணர்கள் மசூதியில் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆய்வுப் பணிகளைத் தொடங்கினர்.

இதுகுறித்து தொல்லியல் துறை குழுவுடன் மசூதிக்குள் இருந்த ஹிந்து மனுதாரர்கள் தரப்பு வழக்குரைஞர் சுபாஷ் சதுர்வேதி கூறுகையில், 'மசூதிக்குள் காலை 7 மணிக்கு ஆய்வுப் பணிகளைத் தொடங்கிய நிபுணர்கள், இஸ்லாமியர்களின் வெள்ளிக்கிழமை தொழுகைக்காக பகல் 12 மணி முதல் 2 மணி நேரம் ஆய்வு பணியை நிறுத்தினர். ஆய்வுப் பணி பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் தொடங்கப்பட்டது. இந்த ஆய்வுப் பணி 5 முதல் 6 நாள்கள் வரை தொடர வாய்ப்புள்ளது' என்றார்.

இந்த ஆய்வின்போது, மசூதி வளாகத்தினுள் ஹிந்து மனுதாரர்களான லட்சுமி தேவி, சீதா சாஹு, ரேகா பாடக் மற்றும் மஞ்சு வியாஸ் ஆகியோர் அவர்களின் வழக்குரைஞர்களுடன் இடம்பெற்றிருந்தனர். அதேநேரம், ஆய்வுப் பணியை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட மசூதி குழு தரப்பு பிரதிநிதிகள், ஆய்வுப் பணியை பார்வையிடுவதைத் தவிர்த்தனர்.

'ஆய்வுப் பணியை 43 உறுப்பினர்களைக் கொண்ட தொல்லியல் துறைக் குழு மேற்கொண்டு வருகிறது' என்று ஹிந்துக்கள் தரப்பு வழக்குரைஞர் மதன் மோகன் யாதவ் தெரிவித்தார்.

**கூடுதலாக 4 வார அவகாசம்:** மசூதியில் அறிவியல்பூர்வ ஆய்வுப் பணிகளை நிறைவு செய்ய தொல்லியல் துறைக்கு கூடுதலாக 4 வார கால அவகாசம் அளித்து வாரணாசி மாவட்ட நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

'வழக்கு விசாரணை காரணமாக மசூதியில் தொல்லியல் துறை ஆய்வுப் பணிகள் கடந்த ஜூலை 24-ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டது. எனவே, ஆய்வுப் பணிகளை நிறைவு செய்ய கூடுதல் கால அவகாசம் அளிக்க வேண்டும்' எனக் கோரி தொல்லியல் துறை தரப்பில் மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை வெள்ளிக்கிழமை விசாரித்த மாவட்ட நீதிபதி ஏ.கே. விஸ்வேஷ், தொல்லியல் துறை கோரிக்கையை ஏற்றார்.

இதுகுறித்து வழக்குரைஞர் மதன் மோகன் யாதவ் கூறுகையில், 'மசூதியில் ஆய்வுப் பணியை நிறைவு செய்வதற்கான காலக்கெடுவை ஆகஸ்ட் 4-ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 4-ஆம் தேதி வரை நீட்டித்து மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்' என்றார்.

## தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு

மசூதியில் ஆய்வுக்கு அனுமதித்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க உச்ச நீதிமன்றமும் வெள்ளிக்கிழமை மறுத்தது.

உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக மசூதி குழு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, 'தொல்லியல் துறையின் இந்த ஆய்வு வரலாற்றுக்குள் செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும், கடந்த கால காயங்களை மீண்டும் திறப்பதாகவும் அமைந்துள்ளது. எனவே ஆய்வுக்கு தடை விதிக்க வேண்டும்' என மசூதி குழு தரப்பில் வாதிடப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த நீதிபதிகள், 'மசூதியில் அறிவியல்பூர்வ ஆய்வு மேற்கொள்ள சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு 10ஏ-இன் கீழ் விசாரணை நீதிபதி பிறப்பித்த உத்தரவு, அதிகார வரம்பை தாண்டியது என்பதை இப்போதே கூறிவிட முடியாது.

நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணையர்களின் வரம்பு மற்றும் தன்மையின் அடிப்படையில், உயர் நீதிமன்றத்தின் கருத்திலிருந்தும் உச்ச நீதிமன்றம் வேறுபட முடியாது. மேலும், தொல்லியல் துறை ஆய்வு முடிவுகள் மட்டுமே இந்த விவகாரத்தில் இறுதித் தீர்வாக அமைந்துவிடாது.

இந்த ஆய்வு முடிவு, பரிசோதனைக்கும் ஆட்சேபங்கள் தெரிவிப்பதற்கும் குறுக்கு விசாரணைக்கும் உள்பட்டதே' என்று குறிப்பிட்ட நீதிபதிகள், 'ஆய்வுப் பணியின்போது துளையிடும் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படக் கூடாது' என்று உத்தரவிட்டனர்.

அப்போது, 'ஆய்வுப் பணி முழுவதும் எந்தவித துளையிடுதல் இல்லாமல் மேற்கொள்ளப்படும்' என்று தொல்லியல் துறை மற்றும் உத்தர பிரதேச மாநில அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா உறுதியளித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், 'தொல்லியல் துறை ஆய்வறிக்கை விசாரணை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதனடிப்படையில் மாவட்ட நீதிபதி முடிவெடுப்பார்' என்று குறிப்பிட்டனர்.